
VIT®
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)

விஐடி பல்கலைக்கழகம் - வேலூர்
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி (SSL)

# முத்தமிழ் விழா



# முத்தமிழ் விழா
# நோக்கம்

**நேரம் - காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை**

அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு, இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழின் மூன்று பரிமாணங்களையும் மாணவர்களின் படைப்பாற்றலோடு இணைத்து வெளிப்படுத்தும் நோக்கில் இம்முத்தமிழ் விழா நடத்தப்படுகிறது.

சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளியின் சார்பில் ஆண்டுதோறும் முன்னெடுக்கப்படும் இவ்விழா, மாணவர்களிடம் தமிழ்மொழி மற்றும் கலைகள் மீதான ஆர்வத்தை வளர்ப்பதோடு, அவர்களின் சிந்தனைத் திறன், படைப்பாற்றல், கற்பனை, கலைத்திறன், மேடை ஆளுமை மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றை வெளிக்கொணரும் ஒரு படைப்புக் களமாக அமைகிறது.

இயலில் கவிதை, கட்டுரை, இசையில் நாட்டுப்புறப் பாடல், நாடகத்தில் நடனம் மற்றும் நாடகம் போன்ற போட்டிகளின் வாயிலாக, மாணவர்கள் தங்கள் தனித்துவமான சிந்தனைகளையும் கலைத் திறன்களையும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது.

மேலும், போட்டிகளை வெறும் திறன் வெளிப்பாடாக மட்டுமல்லாமல், தமிழ் மொழி, நாட்டுப்புறக் கலை, பண்பாடு, சமூக உணர்வு மற்றும் படைப்புச் சிந்தனை ஆகியவற்றோடு மாணவர்களை இணைக்கும் அனுபவமாக உருவாக்குவதே இவ்விழாவின் நோக்கமாகும். கவிதைப் போட்டியில் ஆழமான கருத்துகளையும் புதிய சிந்தனைகளையும் வெளிப்படுத்துதல், இசைப் போட்டியில் குரல், சுருதி, தாளம் மற்றும் இசை அறிவை வெளிப்படுத்துதல், நாடகப் போட்டியில் நடிப்பு, வசன உச்சரிப்பு, உணர்வுவெளிப்பாடு மற்றும் மேடை ஆளுமையை வெளிப்படுத்துதல் போன்ற திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

# போட்டியின் விளக்கமும் விதிமுறைகளும்:

# இயல்

## கட்டுரை

பள்ளி மாணவர்களுக்கான போட்டி.
ஐந்து தலைப்புகள் போட்டிக்கு முன்பே போட்டியாளர்களுக்கு அறிவிக்கப்படும்.
போட்டியின் போது குலுக்கல் முறையில் ஒரு தலைப்பு தேர்ந்தெடுக்கப்படும்.
கட்டுரை கொடுக்கப்பட்ட தலைப்பை விட்டு விலகாமல் இருக்க வேண்டும்.



# கவிதை

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான போட்டி.
பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் வெவ்வேறு தலைப்புகள் வழங்கப்படும்.

சுற்று 1 : முன்னரே வழங்கிய தலைப்பில் இருந்து குலுக்கல் முறையில் ஒரு தலைப்பு தேர்ந்தெடுக்கப்படும்.

சுற்று 2 : சுற்று 1-இல் தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டியாளர்களுக்கு படத்தைப் பார்த்து கவிதை எழுதுதல் போன்ற சுற்று நடைபெறும்.

கவிதை கொடுக்கப்பட்ட தலைப்பை மையமாகக் கொண்டு, ஆழமான கருத்துக்களையும் புதிய சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.



# இசை

## நாட்டுப்புற இசைப் போட்டி

சுற்று 1 - சுய விருப்பப் பாடல்

பங்கேற்பாளர்கள் தாங்கள் விரும்பிய நாட்டுப்புறப் பாடலைத் தேர்ந்தெடுத்து பாட வேண்டும்.
ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் 3 முதல் 4 நிமிடங்கள் வரை நேரம் வழங்கப்படும்.

இந்தச் சுற்றில் குரல் வளம், சுருதி, தாளம், உச்சரிப்பு, பாடல் வெளிப்பாடு மற்றும் மேடை நிகழ்த்தும் திறன் ஆகியவை மதிப்பீடு செய்யப்படும்.



## சுற்று 2 - இசையமைப்பாளரின் பாடல்

முதல் சுற்றில் தேர்வாகும் பங்கேற்பாளர்கள் மட்டுமே இந்தச் சுற்றில் பங்கேற்பார்கள். இந்தச் சுற்றில், நடுவர்களால் ஒரு இசையமைப்பாளரின் பெயர் வழங்கப்படும். அந்த இசையமைப்பாளர் இசையமைத்த ஏதேனும் ஒரு நாட்டுப்புறப் பாடலை பங்கேற்பாளர்கள் உடனடியாகத் தேர்ந்தெடுத்து பாட வேண்டும். இந்தச் சுற்றில் பங்கேற்பாளர்களின் இசை அறிவு, நினைவாற்றல், பாடல் தேர்வு, குரல் வெளிப்பாடு மற்றும் தன்னம்பிக்கையுடன் பாடும் திறன் ஆகியவை மதிப்பீடு செய்யப்படும்.



## நடனப் போட்டி

**சுற்று 1 - சுய நடன சுற்று**
பங்கேற்பாளர்கள் அல்லது குழுக்கள் தாங்களே அமைத்த நடனத்தை மேடையில் நிகழ்த்த வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் 3 முதல் 5 நிமிடங்கள் வரை நேரம் வழங்கப்படும்.

இந்தச் சுற்றில் பங்கேற்பாளர்களின் நடனத் திறன், ஒருங்கிணைப்பு, மேடை ஆளுமை, படைப்பாற்றல் திறன் மதிப்பீடு செய்யப்படும்.



## சுற்று 2 - நடனச் சவால்

முதல் சுற்றில் தேர்வாகும் பங்கேற்பாளர்கள் அல்லது குழுக்கள் மட்டுமே இந்தச் சுற்றில் பங்கேற்பார்கள்.

இந்தச் சுற்றில், நடுவர்களால் ஒரு பாடல் வழங்கப்படும்.
பாடல் அறிவிக்கப்பட்ட பிறகு, பங்கேற்பாளர்களுக்கு 2 நிமிடம் தயாராகும் நேரம் வழங்கப்படும்.
அதன் பின்னர், வழங்கப்பட்ட பாடலுக்கு ஏற்றவாறு உடனடியாக நடனமாட வேண்டும்.

இந்தச் சுற்றில் பங்கேற்பாளர்களின் தன்னிச்சையான சிந்தனை, இசைக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்ளும் திறன், படைப்பாற்றல் மற்றும் மேடை நிகழ்த்தும் திறன் ஆகியவை மதிப்பீடு செய்யப்படும்.

## நாடகப் போட்டி:

சுய விருப்ப நாடக நிகழ்த்தல்

பங்கேற்பாளர்கள் தனிநபர் (Solo) அல்லது குழு (5 முதல் 10 பேர்) பிரிவில் பங்கேற்கலாம். ஒவ்வொரு பங்கேற்பாளரும் அல்லது குழுவும் தாங்கள் விரும்பிய தலைப்பில் 5 நிமிடங்கள் கொண்ட நாடகம் அல்லது நடிப்பை நிகழ்த்த வேண்டும்.



இந்தச் சுற்றில் நடிப்பு திறன், வசன உச்சரிப்பு, உணர்வுகளை வெளிப்படுத்தும் திறன், மேடை ஆளுமை, படைப்பாற்றல் மற்றும் ஒட்டுமொத்த நிகழ்த்தும் திறன் ஆகியவை மதிப்பீடு செய்யப்படும்.

வெற்றியாளரைத் தீர்மானிப்பதில் கதாபாத்திரங்களின் உடைகள் மற்றும் மேடைப் பொருட்களின் பயன்பாடு மற்றும் மையக் கருத்து மிக முக்கியப் பங்கு வகிக்கும்.



## ஆலோசனைக்குழு :

முனைவர் செல்வம்,
புலமுதன்மையர் ,
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி ,

முனைவர் ஆன்டனெட் டேனியல் ,
துறைத்தலைவர் . மொழிகள் துறை
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி ,

## ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் :

முனைவர் அ .மரிய செபஸ்தியான்
உதவிப் பேராசிரியர் ( தமிழ் )
தொடர்புக்கு : 9994025021
மின்னஞ்சல் : mariasebastin.a@vit.ac.in